இனிமையான குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களுக்கு உள்ளப்பூர்வமாக அல்லது மனதார சேவை செய்வதற்காக தந்தை சங்கமயுகத்தில் வந்திருக்கின்றார், இப்போது இந்த நாடகம் முடிவடைகிறது, நீங்கள் அனைவரும் வீடு திரும்ப வேண்டும்.

கேள்வி: இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு கர்மாதீத் நிலை ஏற்பட முடியாது, கடைசியில் தான் ஏற்படும் லி ஏன்?

பதில்: ஏனெனில் ஆத்மாக்களாகிய நீங்கள் கர்மாதீத் நிலையடையும் போது உங்களுக்கு தூய்மை யான தத்துவங்களினால் உருவாக்கப்பட்ட சரீரம் தேவை. இப்போது இந்த 5 தத்துவங்கள் தூய்மை யற்றதாக இருக்கின்றன. எப்போது தத்துவங்கள் தூய்மையாகி விடுமோ அப்போது கர்மாதீத் நிலை ஏற்படும். குழந்தை களாகிய நீங்கள் எப்போது தூய்மையாகி விடுவீர்களோ, பிறகு இங்கு இருக்க முடியாது. தூய்மையாகி விட்டால் தூய்மையான உலகில் தூய்மையான சரீரம் தேவை. ஆகையால் இப்போது நீங்கள் அரை குறையாக இருக்கிறீர்கள், கடைசியில் உங்களது புத்தி யோகம் நிலைத்து விடும், நீங்கள் தூய்மையாகி விடுவீர்கள், உங்களது அனைத்து விகர்மங்களும் அழிந்து விடும், மேலும் நீங்கள் கர்மாதீத் நிலை அடைந்து விடுவீர்கள்.

பாடல்: தூர தேசத்தில் வசிக்கக் கூடியவர் ........

ஓம்சாந்தி. தூர தேசத்தில் இருக்கக் கூடியவர் பிரயாணி. அந்த பிரயாணியைத் தான் அனைத்து மனிதர்களும் அதாவது ஜீவாத்மாக்களும் அவசியம் நினைவு செய்கின்றனர். உண்மையில் அனைத்து ஜீவாத்மாக்களும் பிரயாணம் செய்பவர்கள் தான். எவ்வாறு தந்தை பரந்தாமத்திலிருந்து வர வேண்டியிருக்கிறதோ அதே போன்று குழந்தைகளாகிய நீங்களும் நடிப்பு நடிப்பதற்காக பரந்தாமத்திலிருந்து வருகிறீர்கள். நான் முழு கல்பத்திலும் ஒரே ஒரு முறை தான் வருகிறேன். இதன் காரணத்தினால் தான் என்னை அவதாரம் என்று கூறுகின்றனர். நீங்கள் ஒரே ஒரு முறை இங்கு வருகிறீர்கள், பிறகு இங்கேயே மறு பிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள். நான் ஒரே ஒரு முறை குழந்தைகளிடத்தில் உள்ளப்பூர்வமாக, மனதார, அன்பாக சேவை செய்ய வருகிறேன். தந்தைக்கு அனைத்து குழந்தைகளும் அன்பானவர்கள் அல்லவா! குழந்தைகளின் மீது அன்பில்லாத தந்தை யாரும் இருக்கமாட்டார்கள். குழந்தைகளுக்குத் தான் தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. அவர் எல்லைக்குட் பட்ட தந்தை, இவர் எல்லையற்ற தந்தை. தந்தை எப்போது வருவார்? என்பதை யாரும் அறியவில்லை. இனிய குழந்தைகளே! இப்போது நாடகம் முடிவடைகிறது, திரும்பிச் செல்ல வேண்டும், அதற்கான வழியை யாரும் அறியவில்லை என்று தந்தை கூறுகின்றார். வைகுண்டவாசி ஆகிவிட்டார், நிர்வாண தாமத்திற்குச் சென்று விட்டார் என்று மட்டும் கூறுகின்றனர். இடையில் யாரும் திரும்பிச் செல்ல முடியாது என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். எப்போது அனைவரின் நடிப்பும் முடிவடைகிறதோ அப்போது தந்தை வர வேண்டியிருக்கிறது. ஆத்மாக்களாகிய நாம் சரீரத்திலிருக்கின்ற போது சரீர சம்மந்தத்தில் சகோதரன், சகோதரிகளாக இருக்கிறோம். ஒவ்வொருவரும் அவரவர்களது நடிப்பை நடித்து முடிக்க

வேண்டும். பிறகு அனைவரும் அவரவர்களுக்கான நேரத்தில் நடிப்பு திரும்பவும் நடிக்க வேண்டியிருக்கும். ஹே பதீத பாவனனே வாருங்கள், ஹே சீதா இராமரே வாருங்கள்! என்று தந்தையை அனைவரும் நினைவு செய்கின்றனர். ஒரு இராமர் ஒரு சீதைக்காக வரமாட்டார். அனைத்து சீதைகளுக்கும் இராமர் ஒரே ஒருவர் ஆவார். அனைத்து குழந்தைகளும் நினைவு செய்கின்றனர், பக்தி செய்கின்றனர். இந்த நாடகம் 5 ஆயிரம் ஆண்டிற்கானது. தந்தை கூறுகின்றார் லி நீங்கள் உங்களது பிறப்புகளைப் பற்றி அறியவில்லை. நான் அறிவேன். இலட்சம் ஆண்டிற்கான விசயத்தை யாரும் கூற முடியாது. முதல் முக்கிய விசயம் கீதையின் பகவான் யார்? என்பதாகும். நாடகப்படி மறந்து விட்டதால் தந்தை வந்திருக்கிறார். கீதை படிப்பதால் மட்டும் ஒன்றும் ஆகிவிடாது. தந்தை சுயம் வந்து குழந்தைகளுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றார். நான் உங்களுக்கு கூறக் கூடிய புதுப்புது விசயங்கள் அனைத்தும் மறைந்து போய் விடும். இது பரம்பரை யாக நடைபெறுவது கிடையாது. மற்றவர்கள் வருகின்றனர் எனில் அவர்களுடைய ஞானம் கடைசி வரை நடைபெறுகிறது. ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டு வருகின்றனர். இங்கு கூறக் கூடியவரும் இருக்கமாட்டார், கேட்பவர்களும் இருக்கமாட்டார்கள். அனைவரும் சென்று விடுவார்கள். நாம் 16 கலைகள் நிறைந்தவர்களாக இருக்கிறோம் என்பதையும் அங்கு அறிய மாட்டார்கள். அதுவோ பிராப்தியாகும். 16 கலைகளிலிருந்து பிறகு 14 கலைகளுடையவர்களாக ஆவோம் என்பதை அறிந்திருந்தால் இராஜ்யத்தின் குஷி இருக்காது. உயர்ந்ததிலும் உயர்ந்த தர்மத்தின் சாஸ்திரம் இருக்க வேண்டும் என்று தந்தை புரிய வைக்கின்றார். தேவி தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவரை மறந்து விட்டனர். கீதைக்கு எவ்வளவு மகிமை இருக்கிறதோ அதை விட அதிகமாக ஞானம் கூறக் கூடியவருக்கு மகிமை இருக்கிறது. மற்ற தர்மத்தை ஸ்தாபனை செய்யக் கூடிய யாரையும் பகவான் என்று கூறுவது கிடையாது. பகவான் ஒரே ஒரு நிராகாரமானவர், மற்ற அனைவரும் சாகாரமானவர்கள். ஸ்ரீமத் பகவத் கீதை என்று பாடப்பட்டிருக்கிறது. அவர் அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஆவார். இந்த நேரத்தில் அனைவரும் தமோ பிரதானமாக, பிணக்குழியில் இருக்கின்றனர். பிறகு பாபா வந்து அனைவரையும் எழுப்புகின்றார். இந்த பழைய உலகம் அழியப் போகிறது. கடுகு போன்று அனைவரும் வெடித்து விடுவர். சத்யுகத்தில் மிகவும் சிறிய தெய்வீக மரமாக இருக்கும். ஹே பகவான், ஹே சத்திய கண்டத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவரே.... என்று அனைவரும் நினைவு செய்கின்றனர். ஆனால் அவர் எப்போது வருவார்? சாஸ்திரங்களில் இலட்சம் ஆண்டுகள் என்று எழுதி வைத்து விட்டனர். இது தான் காரிருள் என்று கூறப்படுகிறது. நமது பாபா ஞானக் கடல் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். வேறு யாரும் ஞானக் கடலாக இருக்க முடியாது. ஞானக் கடலான தந்தை தூர தேசத்திலிருந்து குழந்தைகளாகிய நம்மிடம் வந்திருக்கின்றார். நாம் அனைவரும் காரிருளில் இருந்தோம். நாடகத்தில் நாம் அனைவரும் நடிகர்கள் என்பதை அறியாமல் இருந்தோம். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் யார்? என்பதை அறிந்திருக்க வேண்டும். சர்வவியாபி என்று கூறுவது ஞானமா என்ன? ஒருவேளை சர்வவியாபி என்றால் பிறகு பக்தியும் செய்ய முடியாது. இது தான் அஞ்ஞானம் என்று கூறப்படுகிறது. தந்தை அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். அவரது பெயரே பரம்பிதா பரமாத்மா சிவன். அவர் தந்தைக்கெல்லாம் தந்தையானவர். பிறவி பிறவியாக லௌகீகத் தந்தையை அடைந்து வந்தோம். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் தந்தை, பிறகு

வரிசைக்கிரமமாக வருகிறோம். முதன் முதலில் தேவி தேவதா தர்மத்தின் வம்சத்தினர்கள் இறங்குவர். இப்போது அந்த படைப்புகளை தந்தை படைத்துக் கொண்டிருக்கின்றார். பிரம்மாவின் மூலம் பிராமணர்களை எப்படி படைக்கிறார்? பிரஜாபிதா பிரம்மாவின் மூலம் தத்தெடுக்கின்றார். பாபா, நாம் உங்களுடையவராகவே இருந்தோம், இப்போது உங்களுடையவராகவே இருக்கிறோம் என்று குழந்தைகள் கூறுகிறீர்கள். முதன் முதலில் நாம் சத்யுகத்திற்கு வந்திருந்தோம்.

இந்த நேரத்தில் நீங்கள் முழுமை ஆகாத நிலையில் இருக்கிறீர்கள். சூத்ரனிலிருந்து பிராமணர் களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். முழு தூய்மையாக, கர்மாதீத நிலை கடைசியில் அடைவீர்கள். கடைசியில் புத்தி யோகமானது முழுமையாக நிலைத்து விடும், மேலும் விகர்மங்கள் அனைத்தும் அழிந்து விடும். இருப்பினும் இங்கு உங்களை தூய்மையானவர்கள் என்று கூற முடியாது, ஏனெனில் சரீரம் தூய்மையாக இல்லை. இப்போது தூய்மையற்றதிலிருந்து தூய்மையாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். பிறகு சத்யுகத்தில் சரீரமும் தூய்மையானதாக கிடைக்கும். முழு தூய்மை யாக ஆகிவிட்டால் பிறகு இங்கு இருக்க முடியாது. ஆத்மா தூய்மையாக ஆகிவிடும் போது 5 தத்துவங்களும் தூய்மையாக ஆகிவிடும். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் சங்கமத்தில் இருக்கிறீர்கள். உண்மையிலும் உண்மையான கும்ப மேளா இதுவாகும். தண்ணீர் ஓடும் கங்கைக்கு செல்வது பக்திமார்க்கமாகும். சந்நியாசிகள் அங்கு குளிப்பதற்குச் செல்கின்றனர், இருப்பினும் ஆத்மாவில் எதுவும் ஒட்டாது (நிர்லேப்) என்று கூறிவிடுகின்றனர். பக்தி மார்க்கத்தில் நீங்கள் அதிகம் கேட்டு விட்டீர்கள் என்று தந்தை கூறுகின்றார். சரியானது எது? என்று இப்போது நீங்கள் முடிவெடுங்கள். இது அமரக் கதையாகும், இதன் மூலம் நீங்கள் அமரபுரிக்கு எஜமானர்களாக ஆகிவிடுவீர்கள். உங்களிடம் ஒருபோதும் காலன் வரவே முடியாது. இன்னார் இறந்து விட்டார் என்று ஒருபோதும் அங்கு கூறுமாட்டார்கள். இங்கு மரணத்தைப் பார்த்து எவ்வளவு பயம் இருக்கிறது! அங்கு ஆடையை (உடலை) மட்டுமே மாற்றிக் கொள்வர். பாரதத்தின் மகிமை மிகவும் உயர்ந்தது. தந்தையின் மகிமை எவ்வளவோ அவ்வளவு பாரதத்தின் மகிமை இருக்கிறது. இன்று வரையும் பாரதத்தில் லெட்சுமி நாராயணன் கோயில் கட்டிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் தந்தை எப்போது வந்தார்? என்பதை அறிய வில்லை. சத்யுகத்தில் தேவி தேவதைகள் இருந்தனர். சத்யுகம் இலட்சம் ஆண்டுகள் இருந்தது எனில் அவர்களது எண்ணிக்கை (மக்கள் தொகை) அளவற்றதாக இருக்க வேண்டும். யாரும் புத்திக்கு வேலை கொடுப்பது கிடையாது. பசுவின் வாயிலிருந்து கங்கை வெளிப்பட்டது என்று கூறுகின்றனர். அனைத்தும் ஞானத்தின் விசயமாகும். பிறகு சூட்சுமவதனத்தில் பசு எங்கிருந்து வந்தது? இந்த சாஸ்திரங்கள் அரைக் கல்பமாகவே நடைபெற்று வருகிறது. இந்த அனைத்து விசயங்களையும் மிக அன்பான தந்தை குழந்தை களுக்குப் புரிய வைக்கின்றார். அனைவரும் என்னுடைய குழந்தைகள் தான். ஆனால் நீங்கள் மிகவும் அன்பானவர்களாக ஆகிறீர்கள். லெட்சுமி நாராயணன் எப்போது ஆட்சி செய்து சென்றனர்? என்பது தெரியாது. இராதை, கிருஷ்ணரின் பிறந்த நாள் கொண்டாடுகின்றனர். லெட்சுமி நாராயணன் பற்றி தெரியவில்லை. இராமரை திரேதாவில் காண்பிக் கின்றனர். கிருஷ்ணரை துவாபர யுகத்தில் காண்பிக்கின்றனர். இராதை கிருஷ்ணர் சத்யுகத்தைச் சார்ந்தவர்கள் என்பதை நீங்கள் தான் அறிவீர்கள். அனைத்து தர்மங்களும் எப்படி சுழற்சியில் வரும்?

குறிப்பிட்ட தர்மத்தின் ஸ்தாபகர் எப்போது வருவார்? தர்மத்தை ஸ்தாபனை செய்து விட்டு திரும்பிச் சென்று விடுவதாக அவர்கள் நினைக்கின்றனர். அரே ! பிறகு யார் பாலனை செய்வார்கள்? ஒவ்வொரு மனிதனும் படைப்புகளைப் படைக்கின்றனர், பிறகு பாலனையும் செய்கின்றனர். விநாசம் செய்வது கிடையாது. எல்லைக்குட்பட்ட படைப்புகளை படைக்கும் தந்தை அல்பகால, துளியளவு சுகம் கொடுப்பார். யாருக்காவது குழந்தை இல்லையெனில் நமது குலம் எப்படி தழைக்கும்? என்று நினைப்பர். இந்த நேரத்தில் அனைவரும் தூய்மை இல்லாதவர்கள், கீழானவர்கள் என்று தந்தை கூறுகின்றார். பாரதத்தின் நிலை என்னவாகி விட்டது என்று ஒரு பாடல் இருக்கிறது, பிறகு மற்றொரு பாடலில் நமது பாரதம் அனைத்தையும் விட உயர்ந்தது என்று இருக்கிறது. இப்போது உயர்வாக இருக்கிறதா என்ன? கிடையாது. இப்போது முற்றிலும் தூய்மையின்றி இருக்கிறது. குழந்தைகளே! பொறுமையாக இருங்கள், இதுவும் விளையாட்டாகும் என்று தந்தை கூறுகின்றார். இப்போது துக்கத்தின் நாட்கள் முடிவடைந்து சுகத்தின் நாட்கள் வந்து கொண்டிருக்கிறது. இந்த நரகத்தை சொர்க்கமாக்குவதற்காக பரந்தாமத்தில் வசிக்கக் கூடிய தந்தை மாற்றான் தேசத்திற்கு வந்திருக்கின்றார். இது என்னுடைய பிறப்பிடமாகும் என்று தந்தைக் கூறுகின்றார். இல்லை யெனில் நிராகார பாபா எங்கு வந்திருக்கின்றார்? எந்த சரீரத்தில் வந்திருக்கின்றார்? என்று யாராவது கூற முடியுமா? எப்போது வந்தார்? என்ன செய்ய வந்திருக்கின்றார்? என்பதை யாரும் கூற முடியாது. பரம்பிதா பரமாத்மா வந்து தூய்மை இழந்தவர்களை எப்படி தூய்மையாக ஆக்குகின்றார் என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள். குழந்தைகளே! என்னிடத்தில் வேறு எந்த மருந்தும் கிடையாது என்று தந்தை கூறுகின்றார். செல்லமான குழந்தைகளே! நீங்கள் என்னைத் தான் பதீத பாவன் என்று கூறுகிறீர்கள், சர்வசக்திவான் என்று கூறுகிறீர்கள். 5 விகாரங்களை வெல்வதற்கு இப்போது உங்களுக்கு சக்தி தேவை. இம்சைக்கான யுத்தம் இங்கு கிடையாது. இது குப்தமானது. என்னை நினைவு செய்தால் போதும். இது தான் நினைவு என்று கூறப் படுகிறது. (மந்திரம் சொல்வது எதுவுமில்லை) இப்போது அனைவருக்கும் வானபிரஸ்த நிலையாகும். அனைவரும் திரும்பிச் செல்ல வேண்டும். அது சாந்திதாமம் ஆகும். பிறகு அங்கிருந்து தானாகவே சுகதாமத்திற்கு வந்து விடுவீர்கள். அமைதி உங்களது சுய தர்மம் ஆகும். இந்த இராவண இராஜ்யத்தில் அமைதி ஏற்பட முடியாது. மற்றபடி சிறிது காலத்திற்கு விரும்புகிறீர்கள் எனில் அசரீரியாகி அமர்ந்து விடுங்கள். அமைதி அனைவருக்கும் தேவைப் படுகிறது. ஒருவேளை 101 கோடி மக்கள் அமைதியாக அமர்ந்து விட்டாலும் அமைதி ஏற்பட முடியாது. இதுவோ அசாந்தியான உலகமாகும். அமைதிக்கான வழி யாரும் உருவாக்க முடியாது. இதன் பொறுப்பு இறை தந்தையினுடையது. தேவி தேவதைகளின் இராஜ்யம் இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது தான் வைகுண்டம் என்று கூறப்படுகிறது. இப்போது கலியுகத்தின் கடைசி, துக்கதாமம் ஆகும். அது சாந்திதாமம், இனிய வீடாகும். இனிய தந்தையும் அங்கு தான் இருக்கின்றார். அது சுகதாமம், இது துக்கதாமம். இடையில் மற்ற மற்ற தர்மங்கள் வெளிப்படு கின்றன. வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. அவர்கள் கல்பத்தின் ஆயுள் இலட்சம் ஆண்டுகள் என்று கூறி விட்டனர், இதைத் தான் காரிருள் என்ற கூறப்படுகிறது. சத்யுகம் ஒளி நிறைந்ததாகும். மூலவதனத்தில் அளவற்ற அமைதி இருக்கும். இங்கு நாம் நடிப்பு நடிப்பதற்காக வந்திருக் கிறோம்.

தந்தை கூறுகின்றார்: ஹே ஆத்மாக்களே! தனது காது என்ற கர்மேந்திரியத்தின் மூலம் கேட்கிறீர்களா? இந்த நாடகச் சக்கரம் எவ்வாறு சுற்றுகிறது என்பது உங்களுக்கு நினைவில் இருக்கிறது. நீங்கள் இந்த நேரத்தில் திரிகாலதர்சிகளாக இருக்கிறீர்கள். பிராமணர்களாகிய உங்களைத் தவிர வேறு யாரும் திரிகாலதர்சிகள் கிடையாது. ரிஷி முனிவர்களும் கூட நாங்கள் ஈஸ்வரனை அறியவில்லை, நாஸ்திகர்கள் என்று கூறினர். இப்போது நீங்கள் ஆஸ்திகர்களாக ஆகியிருக்கிறீர்கள். தந்தை மற்றும் உலக சக்கரத்தின் முதல், இடை, கடையை அறிவீர்கள். உங்களுக்கு மூன்று லோகங்களின் ஞானம் கிடைத்திருக்கிறது. உங்களைத் தவிர வேறு யாரிடமும் இந்த ஞானம் கிடையாது. லெட்சுமி நாராயணனை திரிலோகிநாத் என்றோ, திரிகால தர்சி என்றோ கூறுவது கிடையாது. திரிலோகிநாத் ஆக மனிதர்கள் இருக்க முடியாது. நீங்கள் மூன்று லோகங்கள் மற்றும் மூன்று காலங்களையும் அறிவீர்கள். லெட்சுமி நாராயணனிடத்திலும் மூன்று லோகங்களின் ஞானம் கிடையாது. விஷ்ணுவிடம் சுயதரிசன சக்கரத்தைக் காண்பிக்கின்றனர். விஷ்ணுவின் இரண்டு ரூபம் லெட்சுமி நாராயணன் ஆகும், இராதை கிருஷ்ணர் தான் லெட்சுமி நாராயணனாக ஆகின்றனர். இந்த நேரத்தில் எவ்வளவு நல்ல நினைவுச் சின்ன கோவில்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது! ஆனால் இதன் சரித்திரத்தை அறிய வேண்டும் அல்லவா! உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஒருவர், அவரது பெயர் சிவன். ருத்ரன் என்றும் கூறுகின்றனர். இது ருத்ர ஞான யக்ஞமாகும். கிருஷ்ண ஞான யக்ஞம் கிடையாது. கிருஷ்ணர் சத்யுகத்தின் இளவரசர் ஆவார். அவர் ஏன் யக்ஞத்தை படைக்க வேண்டும்? ருத்ர யக்ஞத்தின் மூலம் விநாச நெருப்பு உருவாகிறது. சத்யுகத்தில் யக்ஞத்தை உருவாக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த ஞான யக்ஞம் தவிர மற்ற அனைத்தும் பௌதீக யக்ஞமாகும். இதை யக்ஞம் என்று ஏன் கூறுகிறோம்? என்பதை தந்தை புரிய வைத்திருக்கின்றார். பழைய உலகின் இது போன்ற சடங்குகள் அனைத்தும் இதில் அர்ப்பணம் ஆகப் போகிறது. அதனால் தான் பரம்பிதா பரமாத்மா யக்ஞத்தை படைத்திருக்கின்றார், இதன் மூலம் மனிதர்கள் தேவதையாக ஆகின்றனர் என்று கூறப்படுகிறது. தேவதைகளின் பாதங்கள் பழைய உலகில் பதியாது, உங்களுக்கு அனைத்தையும் தந்தை சாட்சாத்காரம் செய்வித்திருக்கின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தனது அமைதி என்ற சுய தர்மத்தில் சதா இருக்க வேண்டும். இது வானபிரஸ்த நிலையாகும், வீட்டிற்கு திரும்பிச் செல்ல வேண்டும். ஆகையால் தந்தையின் நினைவு சதா இருக்க வேண்டும்.

2) கர்மாதீத் நிலையடைவதற்காக முழுமையாக தூய்மையாக ஆக வேண்டும். விகர்மங் களின் சுமைகளை நினைவு யாத்திரையில் அமர்ந்து நீக்கி விட வேண்டும். நினைவு சக்தியின் மூலம் விகர்மங்களின் மீது வெற்றியடைய வேண்டும்.

வரதானம் சுத்த சங்கல்பங்களின் (எண்ணங்களின்) முற்றுகை (வேலி) மூலம்

: சதா குடை நிழலின் அனுபவம் செய்யக் கூடிய, செய்விக்கக் கூடிய திட சங்கல்பதாரி ஆகுக.

உங்களுடைய ஒரு சுத்த மற்றும் சிரேஷ்ட சக்திசாலி சங்கல்பம் மிகவும் அற்புதம் செய்ய முடியும். சுத்த சங்கல்பங்களின் பந்தனம் அல்லது முற்றுகை பலவீனமான ஆத்மாக்களுக்குக் குடைநிழல் ஆகி, பாதுகாப்பிற்கான சாதனம் மற்றும் கோட்டை ஆகி விடும். இதன் அப்பியாசத்தில் மட்டும் முதலில் யுத்தம் நடைபெறும், வீண் சங்கல்பங்கள் சுத்த சங்கல்பங்களைத் துண்டித்து விடும். ஆனால் திட சங்கல்பம் செய்வீர்களானால் உங்கள் துணைவர் சுயம் பாபா ஆவார். வெற்றித் திலகம் சதா உள்ளது. இதை மட்டும் இமர்ஜ் செய்வீர்களானால் வீணானவை தாமாகவே மர்ஜ் ஆகி விடும்.

சுலோகன்: :பரிஸ்தா சொரூபத்தின் சாட்சாத்காரம் செய்விப்பதற்கு சரீரத்தில் இருந்து

விடுபட்டு விலகியிருப்பதற்கான அப்பியாசம் செய்யுங்கள்.